**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 27.03.2026**
**OS. No. 142/2016**
**வழக்கு சாட்சி PW.1– செல்வம், த/பெ.ஜெகநாதன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

<u>4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

8) 1984 ல் ஏற்படுத்தப்பட்ட பாகபிரிவினை ஆவணத்தை பற்றி என் தாயாருக்கு எப்போது தெரியவந்ததாக சொன்னார்கள் என்றால் பாகபிரிவினை ஏற்பட்டவுடனே என்னிடம் அது குறித்து தெரிவித்தார்கள். அதன் பிறகு நான் சொல்லும் பஞ்சாயத்தானது எந்த வருடம் நடந்தது என்றால் வருடம் எனக்கு தெரியவில்லை. பஞ்சாயத்தில் என் தாயார் 1984 ல் பாகபிரிவினை ஏற்பட்ட சொத்துக்கள் குறித்து தனது உரிமையை விடுதலை கொடுத்துவிட்டதாக தெரிவித்துள்ளதற்கு ஆவணம் ஏதேனும் எழுதப்பட்டுள்ளதா என்றால் ஆவணம் எதுவும் எழுதிக்கொள்ளவில்லை. வாய்மொழியாக எந்த வருடம் அவ்வாறு விடுதலை கொடுத்துள்ளார் என்றால் வருடம் எனக்கு தெரியவில்லை.

9) 11.07.2007 ல் என் தாயாருக்கு என்ன வயது இருக்கும் என்றால் சுமார் 68 வயது இருக்கும். அப்போது என் தாயார் உடல்நிலை சரியில்லாமல் படுத்தபடுக்கை ஆகிவிட்டதாக வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் என் தாயார் வெளியே எங்கும் செல்ல இயலாமல், சுயநினைவு இல்லாமல் இருந்தார் என்றால் சுயநினைவு இருந்தது, ஆனால் வெளியில் செல்ல இயலாமல் இருந்தார். 11.07.2007 ல் மேற்கண்ட காரணங்களால் என் தாயாரால் சுயநினைவுடன் எனக்கு எவ்விதமான கிரைய ஆவணமும் ஏற்படுத்திக்கொடுக்க இயலாமல் தான் இருந்தார் என்றால் சரியல்ல.

10) என் தாயார் சுய நினைவுடன் மேற்கண்ட கிரைய ஆவணம் எழுதி கொடுக்கவில்லை என்றும், நான் அவரது மகன் என்பதால் அவர் படுத்த படுக்கையாக இருந்ததை பயன்படுத்திக்கொண்டு பணம் எதுவும் கொடுக்காமல் அவரிடம் எழுதி வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. 11.07.2007 ல் தாவா சொத்தின் சந்தை மதிப்பு எவ்வளவு இருக்கும் என்றால் சந்தை மதிப்பு தெரியவில்லை, மதிப்பீடு எவ்வளவு என்று கேட்டதற்கு தெரிவித்த தொகையை செலுத்தியுள்ளோம். பதிவு அலுவலகத்தில் வழிகாட்டி மதிப்பில் தோராயமாக மதிப்பீடு செய்து, கிரையம் பெற்றுக்கொண்டோமா என்றால் ஆமாம். அதன் உண்மையான மதிப்பு எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

11) மேற்படி கிரைய ஆவணத்தில் சொத்து விவரத்தில் நான்கு புற சக்குபந்தியாக என்ன குறிப்பிட்டுள்ளது என்றால் எனக்கு குறிப்பாக தெரியவில்லை. என் தாயாருக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரப்படி என்ன சொத்து காண்பிக்கப்பட்டுள்ளதே அதை தான் வழக்கு சொத்தாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். மேற்கண்ட கிரையம் செய்து கொடுத்தபோது அந்த கிரைய ஆவணத்தில் கண்ட சொத்தை தவிர வேறுசொத்துக்கள் என் தாயாருக்கு இல்லை என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணத்தில் எனது நிலத்திற்கும் கிழக்கு என்று சக்குபந்தி காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் என் தாயாருக்கு தாவா சொத்திற்கு மேற்கில் எந்தசொத்தும் இல்லை என்றால் சரிதான்.

12) மேற்படி கிரைய ஆவணத்தில் சொத்து விவரத்தில் காட்டப்பட்டுள்ள வீட்டிற்கும், நிலத்திற்கும் தனித்தனியாக என்ன மதிப்பு என்று காட்டவில்லை என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணத்தை யார் எழுதினார் என்றால் செல்லப்பன் என்பவர் எழுதினார். அதில் என் உறவினர் ஜோதி என்பவரும் செல்லப்பனுடன் இருந்தவரும் சாட்சி கையொப்பம் செய்தார்கள், அவர் பெயர் எனக்கு தெரியவில்லை. நான் உண்மையாகவே தொகை கொடுத்து கிரையம் பெற்றிருந்தால் தாவா சொத்தின் அருகிலுள்ளவர்களையோ, என் தாய்மாமன் அல்லது அவரது பிள்ளைகளையோ அழைத்து கிரைய ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்திருப்பேன் என்றும், தெரியாதவர்களை வைத்து கையொப்பம் செய்திருக்க மாட்டேன் என்றால் சரியல்ல, எங்களுக்குள் பேச்சு வார்த்தை அதிகமாக இல்லை.

13) தாவா சொத்திற்கு வழக்கு தாக்கல்செய்தபோது மேற்கண்ட கிரைய ஆவணத்தின்படி பாத்தியப்பட்டது என்று சொல்வதற்கு அன்றைய தேதிப்படி வழிகாட்டி மதிப்பு அல்லது ஆவணத்தில் கண்டுள்ள மதிப்போ செலுத்தவில்லை என்றால் சரிதான். என் தாயார் இறந்தபிறகு உள்ள ரசீதுகள் எதுவும் நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றும், அனைத்து ரசீதுகளும் என் தாயார் உயிருடன் இருந்த 2015 வரை தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையில் தாவா சொத்தில் என் தாயார் அவரது இறப்பு வரை அனுபவத்தில் இருந்தார் என்றும், அவர் இறந்தபிறகு 27.05.1963 தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்ட நிபந்தனைபடி என் தாயாரின் சகோதரர்கள் மற்றும் அவர்களது மகன்களும் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்த ரசீதுகளின்படி நான் அதன் அனுபவத்தில் இல்லை என்றும், என் தாயார் உயிருடன் இருந்த ரசீதுகளை வைத்து உரிமை கொண்டாடுவதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

14) 2ம் பிரதிவாதி தாக்கல் செய்த அ.வ.எண்.19/2016ல் 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கும் 2ம் பிரதிவாதி நடத்தாததால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். என் வழக்கில் பிரதிவாதிகள் தொந்தரவு செய்ததாக சொல்வது எந்த தேதியில் என்றால் தேதி குறிப்பிட்டு எழுதி வைக்கவில்லை. இது தொடர்பாக நாங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளோமா என்றால் உறவினர்கள் என்பதால் புகார் கொடுக்கவில்லை.

13) உண்மையில் என் பெயரிலுள்ள பட்டா, ரசீதுகள் ஆகியவை செல்லாது என்றும், தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்ட நிபந்தனை படி என் தாயாரின் சகோதரர்களுக்கும், அவர்கள் இறந்த பிறகு அவர்களது வாரிசுகளுக்கும் சென்றடையவேண்டிய சொத்து என்றால் சரியல்ல. தாவா சொத்து அவர்களின் பாகபிரிவினை செய்யப்படாத கூட்டு குடும்ப சொத்து என்பதால் அவர்களுக்குதான் அதில் உரிமையுள்ளது என்றால் சரியல்ல. 2007ல் கிரைய பத்திரம் எழுதி வைப்பதற்கு என் தாயாருக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், அதன் அடிப்படையில் நானும்

வழக்கில் எவ்வித உரிமையும் கோர இயலாது என்றால் சரியல்ல. அதனால் உண்மையான உரிமையாளர்களான பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் விளம்புகை பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.